ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/18 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2231/18 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆவது மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆவது இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டத்தின் உபப் பிரிவு 4 (1) மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்துவாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிவிக்கிறேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, யூன் 11.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் **"2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என எடுத்துக்காட்டப்பட முடியும்.

2. 2020 யூலை 16 ஆந் திகதிய 2184/ 21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள், பின்னர் திருத்தப்பட்டவாறான அதன் அட்டவணைகள் உட்பட, 2021 யூன் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியைக் கொண்டிருக்கும் கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு/ விமான வழி ரசீதுடைய இறக்குமதிப் பொருட்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல், 2021 யூன் 11 ஆந் திகதியிலிருந்து பயன்பெறும் வகையில் இதன் மூலம் நீக்கப்படுகிறது.

3. (அ) தற்காலிக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயலாக்கத் திட்டத்தின் (Temporary Import and Export Processing Scheme -TIEP) கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கை முதலீட்டுச் சபை தலைவர் /பணிப்பாளர் நாயகம் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பணிப்பாளர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய இறக்குமதியில் குறைந்தபட்சம் 20% உள்ளூர் பெறுமதி சேர்ப்புக்குட்பட்டது என்ற வகையில் வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் தவிர்ந்த **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக அல்லது பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக மற்றொரு ஏற்றுமதியாளருக்கு வழங்கல் நோக்கத்திற்காக இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபை தலைவர் /பணிப்பாளர் நாயகம் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பணிப்பாளர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இறக்குமதியாளரால் வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் தவிர்ந்த **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக அல்லது பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக மற்றொரு ஏற்றுமதியாளருக்கு வழங்கல் நோக்கத்திற்காக ஆனால் இறக்குமதியில் 20% க்கும் குறைவாக உள்ளூர் பெறுமதி சேர்ப்புக்குட்படுத்தப்பட்டு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படலாம்.

4. (அ) செயன்முறை மற்றும் மீள் ஏற்றுமதியின் நோக்கத்திற்காக இறக்குமதியாளர் ஒருவரினால் வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் தவிர்ந்த **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் இறக்குமதி, பின்வருவனவற்றிற்கு அனுமதிக்கப்படும் ;

i. "அந்நிய செலாவணி இல்லை" (No Foreign Exchange) என்ற அடிப்படையில்

ii. உள்ளூர் வங்கிகளிடமிருந்து நிதியைப் பெறாமல், வெளிநாட்டு வாங்குபவரின் நிதியைப் பயன்படுத்துவதன் மூலம்

iii. நேர்மறை நிலுவைத் தொகையைத் தாண்டாது, வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்குகளில் (Foreign Currency Bank Accounts) மற்றும் வணிக வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் (Business Foreign Currency Accounts) ஏற்றுமதியின் வருவாயிலிருந்து பெறப்பட்ட வைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம்,

மேற்கூறிய சந்தர்ப்பங்களில், இந்த ஒழுங்குமுறையின் விதிகளின் கீழ் இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர் தனது வெளிநாட்டு நாணய வருமானத்தின் மூலத்தை உள்ளூர் வங்கி(களு)க்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) மேலுள்ள 4 (அ) (i) மற்றும் 4 (அ) (ii) ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் படி எந்தவொரு இறக்குமதியும் செய்யப்படும்போது, அந்த இறக்குமதி குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இடம்பெற்றது மற்றும் பிற நிறுவனங்களின் ஒப்புதல்கள் தேவையில்லை என்ற வெளிப்படுத்துகையினைச் சமர்ப்பித்த பின்னர் இலங்கை சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவிக்க முடியும்.

5. விதிமுறைகள் இல. 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள இறக்குமதியாளர் அனைத்து சூழ்நிலைகளிலும் அந்நிய செலாவணி வருமானத்தை மேலுள்ள விதிமுறைகள் இல. 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்பட்ட 120 நாட்களுக்கு மேற்படாமல் இலங்கையிலுள்ள ஒரு வணிக வங்கிக்கு கொண்டு வருவார்.

6. எந்தவொரு நிபந்தனையிலும், அட்டவணை 1 (தற்காலிக இடைநிறுத்தம்) இல் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் மூலம் இலங்கை சுங்க பணிப்பாளர் நாயகம் இதுபோன்ற கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்படாவிட்டால், அப்பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்காக முதலீட்டுச் சபை (இவ்வர்த்தமானியின் விதிமுறைகள் இல. 3 மற்றும் 10) அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தவிர்ந்த வேறு அமைச்சுகள், அரசாங்க திணைக்களம் அல்லது சட்டரீதியான அமைப்பு போன்றவற்றின் எந்தவொரு சட்ட விதிகளின் கீழும் எந்தவொரு கடிதங்களையும் சுங்க பணிப்பாளர் நாயகம் பெறமாட்டார்.

7. **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் புத்துயிரளிக்கும் நோக்கத்துடனும்அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தீர்வை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதுடன் அப்பொருட்களின் இறக்குமதி கீழுள்ள விதிமுறைகளின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.

8\. (அ) 2012 சனவரி 2 ஆந் திகதிய 1739/ 3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) விதிமுறைகளின்படி கொடுப்பனவு நியதிகள் 3 (1) (அ), 3 (1) (ஆ) மற்றும் 3 (1) (இ) ஆகியவற்றின் கீழ் உள்ளூர் சந்தையை இலக்காகக் கொண்ட **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ள 2021 யூன் 11 அன்று அல்லது அதற்கு முன்னரான திகதியுடைய கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு/ விமான வழி ரசீதுடைய எந்தவொரு பொருட்களின் இறக்குமதி ஆயினும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் உற்பத்திப் பொருட்களின் மூலப்பொருட்களானது, குறைந்தபட்ச கடன் வழங்குநர் தீர்ப்பனவுக் காலம் 30 நாட்களைக் கொண்ட **அட்டவணை** I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் உள்நாட்டில் கிடைக்காத ஆனால் அத்தயாரிப்புகளை உற்பத்தி செய்யத் தேவைப்படுகின்ற நிலையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

(இ) மேலுள்ள ஒழுங்குவிதி இல. 8 (அ) இருந்தபோதிலும்,

i. இந்த வர்த்தமானியின் **அட்டவணை** I இல் பட்டியலிடப்பட்டுள்ள இயைபு முறைத் தலைப்பு 69.07 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்களை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்ய இதன் மூலம் அனுமதிக்கப்படுகிறது,

ii. அங்கீகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய பிளாஸ்டிக் கவர்கள், பாகங்கள் மற்றும் இணைப்பிகளை பிளாஸ்டிக் கவர்கள், பாகங்கள் மற்றும் இணைப்பிகளை சுங்கப் பணிப்பாளர் நாயகம் விடுவிக்க முடியும்.

iii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தினால் காலாண்டு அல்லது அரை ஆண்டு அடிப்படையில் வழங்கப்படும் ஒரு சிறப்பு உரிமத்தின் மூலம் வாகனங்கள் மற்றும் வாகன பாகங்கள் தவிர, நாட்டில் நிறுவப்பட்ட எந்தவொரு சர்வதேச உணவு மற்றும் குடிபான நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

9\. மேலுள்ள ஒழுங்குவிதி இல. 8 இருந்தபோதிலும், இலங்கையில் இராஜதந்திர பணிகளில் சேவையாற்றும் இராஜதந்திர அலுவலர்களின் பயன்பாட்டிற்காக செல்லுபடியாகும் கடன் கடிதங்கள் மூலம் வெளிநாட்டு அமைச்சின் முன் அங்கீகாரத்திற்கமைய மோட்டார் வாகனங்கள் ***(இ.மு. தலைப்புகள் 87.02 மற்றும் 87.03 மட்டும்)*** இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கை சுங்கத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை விடுவிப்பதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்துக்கும் கடன் கடிதங்களை நிறுவுவதற்கு எந்தவொரு வணிக வங்கிகளுக்கும், இறக்குமதியாளர் வெளிநாட்டு அமைச்சரின் அங்கீகாரத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

10\. (அ) ஏதேனும் மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் அல்லது வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்கள் அல்லது உள்ளூர் முதலீட்டாளர்களால் நிதியளிக்கப்பட்ட பிற திட்டங்கள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் நோக்கத்திற்காக அட்டவணை ஐ (தொடர்புடைய முகவர்களால் இறக்குமதி செய்யப்படும் சர்வதேச வியாபாரங்கள் உட்பட)இல் பட்டியலிடப்பட்டுள்ள கருத்திட்ட மூலதன பொருட்களின் இறக்குமதி, முதலீட்டுச் சபையின் தலைவர் / பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. மேலும், இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் அத்தகைய கருத்திட்ட மூலதன பொருட்களின் இறக்குமதிக்காக எந்தவொரு உள்ளூர் வங்கிகளின் கடனும் பயன்படுத்தப்படாது.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய நிகழ்வில், இறக்குமதியாளர், இலங்கை முதலீட்டுச் சபை தலைவர்/பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்ட பரிந்துரை ஒன்று கொடுப்பனவை மேற்கொள்ளவும் மற்றும் இலங்கை சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவிப்பதற்கும், வர்த்தக வங்கிகளுக்கும் மற்றும் சுங்க பணிப்பாளர் நாயகத்துக்கும் முறையே சமர்ப்பிக்க வேண்டும்.

11\. **அட்டவணை** I இல் குறிப்பீடுசெய்யப்பட்ட எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்வதற்கான வங்கியில் கொடுப்பனவு செய்யும் ஆளொருவர் அவரது விண்ணப்பத்தில், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை “அ” இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சரியான இயைபுமுறைக் குறியீட்டு முறைமை மற்றும் பொருட்கள் வகைப்பாடு (எச்.எஸ்) குறியீடு மற்றும் இந்த வர்த்தமானியில் தொடர்புடைய பொருட்களின் அட்டவணை என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

*12.* 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 21ஆவது பிரிவின் பிரகாரம், அச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் விதிக்கப்பட்ட வரையறைகள் சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட் வரையறையாகக்கருதப்படும். எனவே, இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்கமைவாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் செயற்படுதல் வேண்டும்.

*13.* இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயமாற்றுத் திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைகளம் என்பவற்றின் தலைவர்கள் இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுடன் இணங்கியொழுகும் வகையில் வணிக வங்கிகள் செயற்படுவதனை உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.

*14.* வங்கியினால் இவ் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுகளை மீறி செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அந்நியச் செலாவணிகள் திணைக்களத்தின் தலைவர் மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அத்தகைய ஒழுங்குவிதி மீறல்கள் மற்றும் அவை தொடர்பிலான ஆவண வடிவிலான ஆதாரங்களுடன் விபரமாக அறிவித்தல் வேண்டும். அத்தகை வழக்குகளுக்கு, அந்நியச் செலாவணிகள் திணைக்களத் தலைவர் மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம், சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளல், அல்லது உரிய நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

*15.* வெளிப்படுத்துபவர் அல்லது இறக்குமதியாளர் இவ் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில், சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தீர்வை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் ஆகியோரினால் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளபடி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

*16.* இந்த வர்த்தமானியின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளினை மீறி ஏதேனும் பொருளை சரக்கை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பொருட்களின் இறக்குமதியினையும் மற்றும் சுங்கத்திலிருந்து விடுவிப்பினையும் தீர்வை நிர்ணயக் தீர்மானக் குழு அனுமதிக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய இறக்குமதியாளருக்கு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் அபராதம் மற்றும் ஆவணக் கட்டணத்தை விதிப்பார்.

*17.* இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் "செயற்பாட்டு வழிமுறைகள்" ஐ சுங்கப் பணிப்பாளர் நாயகம், உள்ளூர் வங்கிகள், கைத்தொழில் அமைச்சு, கமத்தொழிற் திணைக்களம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

*18.* மேற்படிஒழுங்குவிதிகளை செயற்படுத்தும்போது எழுகின்ற எந்தவொரு பிரச்சினையிலும் இறுதி முடிவானது, தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் புத்துயிரூட்டும் வகையில் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தீர்வை நிர்ணயக் குழுவின் பரிந்துரைகளின்படி எடுக்கப்படுதல் வேண்டும்.

*19.* இவ் ஒழுங்கு விதிகளில்,

i. **"இறக்குமதிகளின் தற்காலிக இடைநிறுத்தம்"** என்பதனால் கருதப்படுவது மேலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்காதபொருட்களின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

ii. **"ஏற்றுமதி"** என்பதனால் கருதப்படுவது 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 22 ஆவது பிரிவில் குறிப்பிடபட்ட எந்தவொரு பொருள் தொடர்பிலும், கடலால் அல்லது ஆகாயத்தால் இலங்கையில் இருந்து கொண்டு செல்லல் மற்றும் வெளியே கொண்டு செல்லல் அல்லது இலங்கையில் இருந்து கொண்டு செல்வதற்கான நிலை ஏற்படல்.

iii. **"இறக்குமதி"** என்பதனால் கருதப்படுவது, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கஇறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 22 ஆவது பிரிவில் குறிப்பிடபட்ட எந்தவொரு பொருள் தொடர்பிலும் கடலால் அல்லது ஆகாயத்தால் இலங்கைக்கு இறக்குமதி செய்தல் அல்லது கொண்டு வருதல் அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அல்லது கொண்டு வருவதற்கான ஏற்படும் நிலை.

iv. **"உள்நாட்டு பெறுமதி சேர்ப்பு"** என்பதன் மூலம் கருதப்படுவது, இறக்குமதி செய்யப்பட்ட பொருள் அலகுகளின் பெறுமதி தொழிற்சாலையில் உச்ச பயன் பெறுகின்ற அளவு என்பதோடு கீழ்க் காணப்படும் சமன்பாட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{உள்நாட்டு பெறுமதி சேர்ப்பு} = \frac{(\text{ஏற்றுமதி தொழிற்சாலை செலவு} - \text{இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள் செலவு})}{\text{ஏற்றுமதி தொழிற்சாலை செலவு}} \times 100\%$$

இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மதிப்புக்கு, பின்வருவன மட்டுமே சேர்க்கப்படும்

அ. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவு, காப்பீடு, சரக்குப்(சிஐஎஃப்)பெறுமதி
ஆ. சுங்கத் தீர்வை
இ. துறைமுகம் மற்றும் விமான நிலைய அறவீடு
ஈ. பிற இறக்குமதி கட்டணங்கள்

ஏற்றுமதி தொழிற்சாலை செலவுக்கு, பின்வருவன மட்டுமே சேர்க்கப்படும் :

அ. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உள்ளீடுகளின் விலை (பொருட்கள் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் பாகங்கள்)
ஆ. நேரடி தொழிலாளர் செலவு (சம்பளம் மற்றும் ஊதியங்கள்)
இ. தேய்மானச் செலவு

v. ***"அந்நியச் செலாவணி அடிப்படையல்லாத"*** என்பதன் மூலம் கருதப்படுவது அந்நியச் செலாவணியானது இலங்கைக்கு வெளியே செல்லாமல் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுதல் ஆகும்.

vi. ***"கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள்"*** என்பது கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள், ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும்/ அல்லது வேறு மூலோபாய பொருட்கள் அல்லது அபிவிருத்தித் திட்டத்திற்கு அல்லது வாகனங்கள், வாகன பாகங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் விவசாய பொருட்கள் தவிர்ந்த பிரிவு 17 கருத்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள்.

vii. ***"மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டம்"*** என்பது 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டத்தையும் அதன் மூலம் வெளியிடப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் குறிக்கப்படும்.

viii. ***"பிரிவு 17 கருத்திட்டங்கள்"*** என்பது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபை சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். இது முதலீட்டு வரம்பை அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்த முதலீட்டுச் சபையுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

ix. ***"உள்ளூர் சந்தை"*** என்பது இலங்கையில் உள்ளூர் நுகர்வு அல்லது தனி நபரின் நுகர்வுக்காக பொருட்களை விற்பனை செய்வதாகும்.

x. ***"வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்"*** என்பது இந்த வர்த்தமானியின் இயைபு முறை தலைப்புகள் 87.02, 87.03, 87.04, 87.05, 87.07, 87.11 மற்றும் 87.12 ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்களைக் குறிக்கும்.

xi. ***"பிளாஸ்டிக் பொருட்கள்"*** என்பது இந்த வர்த்தமானியின் இயைபு முறை தலைப்புகள் 39.22, 39.23, 39.24, 39.25 மற்றும் 39.26 ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்களைக் குறிக்கும்.

xii. ***"விவசாயப் பொருட்கள்"*** என்பது இந்த வர்த்தமானியில் 07.02, 07.03, 07.05, 07.06, 07.07, 07.08, 07.09, 07.13, 07.14, 08.01, 08.03, 08.04, 08.07, 08.10, 08.11, 10.06, 10.08, 11.02, 11.03, 11.06, 12.02, 12.07, மற்றும் 12.08 என்ற இயைபு முறை தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள் எனப் பொருட்படும்.

xiii. ***"அனுமதிக்கப்பட்ட பொருட்கள்"*** என்பது இந்த வர்த்தமானியில் ஒழுங்குவிதிமுறைகள் இல. 3, 4, 8(ஆ), 10 மற்றும் 18 இன் கீழ் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட பொருட்களைக் குறிக்கும்.

## அட்டவணை I

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| **1** | **03.04** | | | **முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சிகளும் (சிறு துணிக்கைகளாக அரைக்கப்பட்ட அல்லது அரைக்கப்படாத) புதியவை, குளிரூட்டப்பட்டவை அல்லது குளிரால் உறையச் செய்யப்பட்டவை.** | |
| | | | - | புதிய அல்லது குளிரூட்டப்பட்ட திலாபியாஸ் துண்டுகள் (ஒறிகுறோமிஸ் இன), கெற்பிஸ் (பங்காசியஸ் இன,சிலூரஸ் இன, கிளாறியஸ் இன, டலூறஸ் இன.), காப்(சைப்றீனஸ் இன, கராசியஸ் இன, க்டெனோபாகறைன்கோடன் ஐடிவ்லஸ், கைப்பொப்தல் மிக்திஸ் இன, சிறினஸ் இன, மைலோபறைன்கோடன் பிசியஸ், கட்லா கட்ல, லாபியோ இன, ஒஸ்ரியோசீலஸ் கஸ்ஸல்டி, லெப்ரோபாபஸ் ஹூவினி மெகாலொப்ராம இன.), விலாங்குகள் (அங்கியுலா இன), நைல் பேச் (லேரஸ் நிலோடிகஸ்) மற்றும் விரால் (சன்னா இன): | |
| | | 0304.39.00 | -- | பிற | TS |
| | | | - | பிற மீன் உடைய குளிரூட்டப்பட்ட முள்ளற்ற துண்டுகள்: | |
| | | 0304.81.00 | -- | பசுபிக் சல்மன் (ஒன்கொறைன்சஸ் நேகா, ஒன்கோறைசன்சஸ் கோபஸ்ஷா, ஒன்கோறைசன்சஸ் கெடா, சவ்வைட்சா, ஒன்கோறைசன்சஸ் கிசுச், ஒன்கோறைசன்சஸ் மசோ மற்றும் ஒன்கோறைசன்சஸ் றோதுறஸ்) ஆட்லாந்திக் சல்மன் (சல்மோ சலர்) மற்றும் தனூபி சல்மன் (குசோ) | TS |
| | | 0304.87.00 | -- | டுனாஸ் (துன்னஸ் இனத்தினது) ஸ்கிப்ஜெக் அல்லது ஸ்ட்றைப் - பில்லீட் பொனிடோ (யுதைன்னஸ் (கட்சுவனஸ்) பெலமிஸ்) | TS |
| | | | - | பிற, குளிரூட்டப்பட்ட: | |
| | | 0304.95.00 | -- | அலஸ்கா பொல்லக் நீங்கலாக (தெரக்ரா சல்கொக்றம்மா) நீங்கலாக பிறிக்மாசெறோரிடே, யூக்கிளிச்தீடி, காடீடி, மெக்றோறிடே, மெலானோனிடே, மேளியுக்சிடே, மெலானோனிடே, மேலியக்சிடே, மொறிடே மற்றும் முறயினொலிபைடிடே ஆகிய இனங்களது மீன், அலஸ்கா பொல்லக் (தெரக்ரா சல்கொக்றம்மா) | TS |
| | | 0304.99.00 | - | பிற | TS |
| | | | | | |
| **2** | **04.02** | | | **பாலும் பாலேடும், செறிவாக்கப்பட்டவை அல்லது சீனி உள்ளடக்கப்பட்டவை அல்லது பிற இனிப்புப் பொருட்கள் தொடர்பானவை.** | |
| | | | - | பிற: | |
| | | 0402.99.00 | -- | பிற: | |
| | | 0402.99.10 | --- | கட்டியாக்கப்பட்ட பால் இனிப்பூட்டியது | TS |
| | | | | | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **3** | **07.02** | 0702.00.00 | | **தக்காளிகள், புதியவை அல்லது குளிரூட்டியவை.** | TS |
| | | | | | |
| **4** | **07.03** | | | **வெங்காயங்கள், சலொற் வெங்காயங்கள், உள்ளி, லீக்ஸ் மற்றும் பிற அலியேசியஸ் மரக்கறி வகை புதியவை அல்லது குளிரூட்டியவை.** | |
| | | 0703.90.00 | - | லீக்ஸ் மற்றும் பிற அலியேசியஸ் மரக்கறிகள் | TS |
| | | | | | |
| **5** | **07.05** | | | **லெற்யூஸ் (லக்ருகா சாதைவா) உம் சிகோரி (சிகோரியம் இன) புதிய அல்லது குளிரூட்டியவை.** | |
| | | | - | லெற்யூஸ் : | |
| | | 0705.11.00 | -- | லெற்யூஸ் கோவா (லெற்யூஸ் தலைப்புடன்) | TS |
| | | 0705.19.00 | -- | பிற | TS |
| | | | - | சீகோரி : | |
| | | 0705.21.00 | -- | விட்லூப் சீகோரி *(சீகோரியம் இன்ரிபஸ், போலியோஸம் வகை)* | TS |
| | | 0705.29.00 | -- | பிற | TS |
| | | | | | |
| **6** | **07.06** | | | **கரட்கள், ரேர்னிப்பஸ்கள், சலாது பீற்றூட், சால் சிபை, செலறியாக், முள்ளங்கியும் அவை போன்ற உண்ணத்தக்க வேர் கிழங்குகளும் புதியவை அல்லது குளிரூட்டியவை.** | |
| | | 0706.10.00 | - | கரட்டுக்களும் ரேனிப்ஸ்சுகளும் | TS |
| | | 0706.90.00 | - | பிற | TS |
| | | | | | |
| **7** | **07.07** | | | **வெள்ளரிக்காய்களும் கெக்கரிக்காய்களும் புதியன அல்லது குளிரூட்டியவை :** | |
| | | 0707.00.10 | --- | வெள்ளரிக்காய் | TS |
| | | 0707.00.20 | --- | கெக்கரிக்காய் | TS |
| | | | | | |
| **8** | **07.08** | | | **அவரை இன (லேகுமினோஸ்) மரக்கறிகள் கோது நீக்கிய அல்லது கோது நீக்காத, புதியவை அல்லது குளிரூட்டியவை** | |
| | | 0708.10.00 | - | பட்டாணிக் கடலைகள் *(பைசம்சற்றைவம்)* | TS |
| | | 0708.20.00 | - | அவரை *(விக்னா இன, பாசியோலஸ் இன)* | TS |
| | | 0708.90.00 | - | பிற அவரை இன (லேகுமினோயஸ்) மரக்கறிகள் | TS |
| | | | | | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| **9** | **07.09** | | | **பிற மரக்கறிகள், புதியன அல்லது குளிரூட்டியவை.** | |
| | | | - | காளான்களும் நிலவடிக் காளான்களும் : | |
| | | 0709.51.00 | -- | அகாரிகாஸ் ஜீனஸ்களின் காளான்கள் | TS |
| | | 0709.59.00 | -- | பிற : | |
| | | 0709.59.10 | --- | நிலவடிக் காளான்கள்(உணவுப் பண்டங்களுக்கு மணமூட்டும் காளான்) | TS |
| | | 0709.59.90 | --- | பிற | TS |
| | | 0709.60.00 | - | கப்சிகம் இன அல்லது பிமந்தா இனப் பழங்கள் | TS |
| | | | - | பிற : | |
| | | 0709.93.00 | -- | (பூசணி) பரங்கிக்காய், நசுக்கப்பட்ட குழம்பு மற்றும் பற்றி எனும் கொடியின் காய்கள் (கியுகேபிடா இன.) | TS |
| | | 0709.99.00 | -- | பிற : | |
| | | | --- | இனிப்பு சோளம் (சீ மேய்ஸ் வார். சஷராடா), வித்து நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத: | |
| | | 0709.99.12 | ---- | பிற | TS |
| | | 0709.99.20 | ---- | பிற | TS |
| | | | | | |
| **10** | **07.13** | | | **உலர்த்திய அவரை இன மரக்கறி வகைகள், கோது நீக்கியவை, தோல் நீக்கப்பெறாதவை அல்லது பிளக்கப்பட்டவை அல்லது இரண்டும் செய்யப்படாதவை.** | |
| | | | - | அவரைகள் (விக்னா இன, பசீலஸ் இன) | |
| | | 0713.31.00 | -- | அவரைகள் விக்னா முங்கோ இன (L) கெப்பர் அல்லது விக்னா ராடியாட்டா (L) வில்க்செக் : | |
| | | | --- | பச்சைக் கடலை (பாசிப் பயறு) : | |
| | | 0713.31.19 | ---- | பிற | TS |
| | | 0713.35.00 | -- | கௌபி *(விக்னா அங்குயிகுலாதா)* : | |
| | | 0713.35.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **11** | **07.14** | | | **மரவள்ளி, ராபு, சலப், ஜெரூசலம் கூனைப் புழுக்கள், வத்தாளை கிழங்குகள் மற்றும் அதிக மாப்பொருள் அல்லது இன்சுலின் கொண்ட வேர்களும் அவை போன்ற கிழங்கு வகைகளும், புதிய குளிரூட்டிய குளிர் உறைய வைத்த அல்லது உலர்த்தி துண்டுகளாக்கப்பட்டவை அல்லது துண்டுகளாக்கப்படாதவை அல்லது சிறு உருண்டைகளாக்கப்பட்டவையும்; சவ்வரிசி.** | |
| | | 0714.10.00 | - | மரவள்ளிக் கிழங்குகள் (கசவ்வா) | TS |
| | | 0714.20.00 | - | வத்தாளைக் கிழங்குகள் | TS |
| | | | | | |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| 12 | 08.01 | | | **புதிய அல்லது உலர்த்திய கோது நீக்கிய அல்லது நீக்காதமற்றும் தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப் படாத தேய்காய்கள், பிரேசில் விதைகளும் மரமுந்திரி விதைகளும்** | |
| | | | - | மரமுந்திரி விதைகள்: | |
| | | 0801.32.00 | -- | கோது நீக்கியவை | TS |
| | | | | | |
| 13 | 08.03 | | | **வாழைப்பழங்கள், வாழை இன பழங்கள் உட்பட புதியவை அல்லது உலர்த்தியவை.** | |
| | | 0803.10.00 | - | வாழைப்பழங்கள்: | |
| | | 0803.10.10 | --- | புதியவை | TS |
| | | 0803.10.90 | --- | பிற | TS |
| | | 0803.90.00 | - | பிற: | |
| | | 0803.90.10 | --- | புதியவை | TS |
| | | 0803.90.90 | --- | பிற | TS |
| | | | | | |
| 14 | 08.04 | | | **பேரீச்சம் பழங்கள், அத்திப் பழங்கள் (பீக்ஸ்) அன்னாசிப் பழங்கள், அவகாடோக்கள், கொய்யாப் பழங்கள், மாம்பழங்கள், மங்குஸ்தான் பழங்கள், புதிய அல்லது உலர்த்தியவை.** | |
| | | 0804.30.00 | - | அன்னாசிப் பழங்கள் : | |
| | | 0804.30.10 | --- | புதியவை | TS |
| | | 0804.30.20 | --- | சாறு இல்லாத காய்ந்த | TS |
| | | 0804.40.00 | - | அவகாடோக்கள் : | |
| | | 0804.40.10 | --- | புதியவை | TS |
| | | 0804.40.20 | --- | சாறு இல்லாத காய்ந்த | TS |
| | | 0804.50.00 | - | கொய்யாப் பழங்கள், மாம்பழங்கள் மற்றும் மங்குஸ்தான் பழங்கள் : | |
| | | 0804.50.10 | --- | கொய்யாப்பழங்கள், புதியவை | TS |
| | | 0804.50.20 | --- | கொய்யாப்பழங்கள், காய்ந்தவை | TS |
| | | 0804.50.30 | --- | மாம்பழங்கள், புதியவை | TS |
| | | 0804.50.40 | --- | மாம்பழங்கள், காய்ந்தவை | TS |
| | | 0804.50.50 | --- | மங்குஸ்தான் பழங்கள், புதியவை | TS |
| | | 0804.50.60 | --- | மங்குஸ்தான், காய்ந்தவை | TS |
| | | | | | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **15** | **08.07** | | | **முலாம் பழங்கள் (தர்ப்பூசணி உட்பட) பப்பாளிகள் (பப்பயாஸ்), புதியவை.** | |
| | | | - | தர்ப்பூசணி (தர்ப்பூசணி உட்பட) : | |
| | | 0807.11.00 | -- | தர்ப்பூசணி | TS |
| | | 0807.19.00 | -- | பிற | TS |
| | | | | | |
| **16** | **08.10** | | | **பிற பழங்கள், புதியவை.** | |
| | | 0810.10.00 | - | ஸ்ரோபெறிகள் | TS |
| | | 0810.60.00 | - | தூரியம் பழம் | TS |
| | | | | | |
| **17** | **08.11** | | | **நீர் ஆவியிலோ அல்லது கொதி நீரிலோ சமைத்த அல்லது சமைக்கப்படாத குளிரால் உறையச் செய்த சீனியோ பிற இனிப்புகள் சேர்க்கப்பட்ட அல்லது சேர்க்கப்படாத பழங்களும் விதைகளும்.** | |
| | | 0811.10.00 | - | ஸ்ரோபெறிகள் | TS |
| | | | | | |
| **18** | **10.06** | | | **அரிசி.** | |
| | | 1006.20.00 | - | உமி அகற்றிய அரிசி (கபில நிறமானது) | TS |
| | | 1006.30.00 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை அல்லது மெருகூட்டப் படாதவை, பளபளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளபாக்கப்படாதவை: | |
| | | 1006.30.10 | --- | பச்சை அரிசி (கெகுலு) | TS |
| | | 1006.30.20 | --- | நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | TS |
| | | 1006.30.30 | --- | சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | TS |
| | | 1006.30.40 | --- | பாஸ்மதிஅரிசி மற்றும் நீள் குறுணிஅரிசி (லோங் கிறயின் றைஸ்) –**(பாஸ்மதி அரிசி தவிர)** | TS |
| | | 1006.30.90 | --- | பிற | TS |
| | | 1006.40.00 | - | உடைந்த அரிசி | TS |
| | | | | | |
| **19** | **10.08** | | | **சாமை கோதுமை, திணை மற்றும் புல் விதைகள்; வேறு தானியங்கள்.** | |
| | | | - | திணை : | |
| | | 1008.29.00 | -- | பிற : | |
| | | 1008.29.10 | --- | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன.) | TS |
| | | 1008.29.90 | --- | பிற (மஞ்சள் திணை தவிர) | TS |
| | | | | | |

அட்டவணை **I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I இ.மு தலைப்பு | நிரல் II இ.மு குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV தற்காலிக இடைநிறுத்தம் **(TS)** |
|---|---|---|---|---|---|
| **20** | **11.02** | | | **கோதுமை அல்லது மெஸ்லின் தவிர்ந்த ஏனைய தானிய மாவுகள்.** | |
| | | 1102.20.00 | - | சோளம் மாவு (கோர்ன்) | TS |
| | | 1102.90.00 | - | பிற : | |
| | | 1102.90.10 | --- | அரிசி மாவு | TS |
| | | 1102.90.20 | --- | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) மாவு | TS |
| | | 1102.90.30 | --- | றே மாவு (ஒருவகை கம்பு போன்ற தானியம்) | TS |
| | | 1102.90.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **21** | **11.03** | | | **உமி நீக்கப்பட்ட, தூளாக்கப்பட்டதும் சிறு உருண்டைகளாக்கப்பட்டதுமான தானியங்கள்.** | |
| | | | - | உமி நீக்கப்பட்டவை மற்றும் தூளாக்கப்பட்டவை : | |
| | | 1103.11.00 | -- | கோதுமையின் | TS |
| | | 1103.13.00 | -- | சோளத்தின் (கோர்ன்) | TS |
| | | 1103.19.00 | -- | பிற தானியங்களின் | TS |
| | | 1103.20.00 | - | சிறு உருண்டைகளாக்கப்பட்டவை | TS |
| | | | | | |
| **22** | **11.06** | | | **தலைப்பு 07.13 இன் கீழுள்ள உலர்த்திய அவரையின் மரக்கறி, மாவும் தூளும் சவ்வரிசியன் (சாகோ) அல்லது தலைப்பு 07.14இன் கீழுள்ளவற்றின் வேர்கள் அல்லது கிழங்குகளின் அதிகாரம் 08 உள்ள உற்பத்திகள் மா தூளும் பொடியும்.** | |
| | | 1106.10.00 | - | தலைப்பிலக்கம் 07.13 இன் கீழுள்ள உலர்ந்த அவரை மரக்கறிகளின் : | |
| | | 1106.10.10 | --- | கறுப்பு உழுந்து மா | TS |
| | | 1106.10.90 | --- | பிற | TS |
| | | 1106.20.00 | - | தலைப்பிலக்கம் 07.14 இன் கீழுள்ள வேர்கள் அல்லது கிழங்குகளின் சவ்வரிசியின் (சாகோ) : | |
| | | 1106.20.90 | --- | பிற | TS |
| | | 1106.30.00 | - | அதிகாரம் 8 இன் கீழுள்ள பொருட்களின்: | |
| | | 1106.30.10 | --- | உலரவைத்த தேங்காய் கொப்பரை, எண்ணையினை பிளிந்து எடுத்ததன் பின்னர் அவை தூள்களாக்கப் பட்டவை அல்லது மாவுகளாக்கப்பட்டவை | TS |
| | | 1106.30.90 | --- | பிற | TS |
| | | | | | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I இ.மு தலைப்பு | நிரல் II இ.மு குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV தற்காலிக இடைநிறுத்தம் **(TS)** |
|---|---|---|---|---|---|
| **23** | **12.02** | | | **வேர் கடலை, வறுக்கப்படாதவை அல்லது வேறு வகையில் சமைக்கப்படாதவை. கோது நீக்கப்பட்டவை அல்லது உடைக்கப்பட்டவை அல்லது இரண்டும் செய்யப்படாதவை** | |
| | | 1202.30.00 | - | விதை | TS |
| | | | - | பிற: | |
| | | 1202.41.00 | -- | கோதுடன் கூடியவை | TS |
| | | 1202.42.00 | -- | கோது நீக்கியவை, உடைக்கப்பட்டவை அல்லது உடைக்கப்படாதவை. | TS |
| | | | | | |
| **24** | **12.07** | | | **வேறு எண்ணெய் விதை மற்றும் மாவும் துவல்களும் அல்லது கொழுப்பார்ந்த பழங்கள், உடைக்கப்பட்டவை அல்லது உடைக்கப்படாதவை** | |
| | | 1207.40.00 | - | எள்ளு விதைகள் | TS |
| | | | | | |
| **25** | **12.08** | | | **எண்ணைய் விதை மாவும் துவல்களும் அல்லது கொழுப்பார்ந்த பழங்கள் கடுகு நீங்கலாக.** | |
| | | 1208.10.00 | - | சோயா அவரையின் | TS |
| | | 1208.90.00 | - | பிற | TS |
| | | | | | |
| **26** | **15.13** | | | **தேங்காய் (கொப்பறா), பாம் வித்தகவிழையம் அல்லது பாபஸ்ஸு எண்ணெய்யும் அவற்றின் பகுதிகளும், சுத்தமாக்கப்பட்டவை அல்லது சுத்தமாக்கப்படாதவை, எனினும் இரசாயன முறையில் மாற்றம் செய்யப்படாதவை.** | |
| | | | - | பாம் வித்தகவிழையம் அல்லது பாபஸ்ஸூ எண்ணெய்யும் அவற்றின் பகுதிகளும்: | |
| | | 1513.21.00 | -- | செம்மை செய்யப்படாத எண்ணெய் (கச்சகன்) | TS |
| | | 1513.29.00 | -- | பிற | TS |
| | | | | | |
| **27** | **21.06** | | | **தயாரித்த உணவு வேறு இடத்தில் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத** | |
| | | 2106.90.00 | - | பிற : | |
| | | 2106.90.60 | --- | பப்படம் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | TS |
| | | | | | |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **28** | **22.01** | | | **நீர், இயற்கை அல்லது செயற்கை கனிப்பொருள் நீர், காற்றூட்டப்பட்ட நீர் என்பவை உட்பட, சேர்க்கப்பட்ட சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தம் கொண்டிராததுடன், மணமூட்டப்படாதவை: பனிக்கட்டியும் உறை பனியும்.** | |
| | | 2201.10.00 | - | கனிப்பொருள் நீரும் காற்றூட்டப்பட்ட நீரும் | |
| | | 2201.10.10 | --- | கனிப்பொருள் நீர் | TS |
| | | 2201.10.90 | --- | பிற | TS |
| | | 2201.90.00 | - | பிற: | |
| | | 2201.90.10 | --- | நீர் | TS |
| | | 2201.90.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **29** | **22.06** | **2206.00.00** | | **நொதிக்க வைத்த பிற பானங்கள் (உதாரணமாக சிடர், பெறி, மீட், சேக்): நொதிக்க வைத்த பானங்களினது கலவைகள் மற்றும் நொதிக்க வைத்த பானங்களினது கலவைகளும் மதுசாரமற்ற பானங்களும், வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை அல்லது உள்ளடக்கப்படாதவை.** | |
| | | 2206.00.90 | --- | பிற | |
| | | 2206.00.91 | ---- | பனைமரக்கள் | TS |
| | | 2206.00.99 | ---- | பிற | TS |
| | | | | | |
| **30** | **22.09** | | | **அசெற்றிக் அமிலத்தில் இருந்து பெறப்பட்ட வினாகிரியும் வினாகிரிக்குப் பதிலான மாற்றீடுகளும்.** | TS |
| | | | | | |
| **31** | **25.15** | | | **சலவைக் கல் (மார்பிள்) பொற்படிவக் கல் (ட்ரவர்டைன்) கிகௌஸைனும், பிற சிலை வடிக்கும் கற்களும் அல்லது 2.5 அல்லது கூடிய தண்ணீர் உள்ள கட்டிடக் கற்கள், அளப்பாஸ்டரும், செவ்வக (சதுரம் உட்பட) குற்றிகளாக அல்லது தட்டுகளாக அரிந்து அல்லது வேறு வழிகளில் மேலோட்டமாகச் சீவப்பட்டவை அல்லது வெறுமனே வெட்டப்பட்டவை அல்லது இவை இரண்டும் செய்யப்படாதவை** | |
| | | | - | சலவைக் கல் மற்றும் பொற்படிவக் கல் (ட்ரவர்டைஸ்): | |
| | | 2515.11.00 | -- | செம்மையில்லாத அல்லது மேலோட்டமாகச் சீவப்பட்டவை | TS |
| | | 2515.12.00 | -- | நீள் சதுரங்களாக (சதுரங்கள் உட்பட) குற்றிகளாக அல்லது தட்டுகளாக அரிந்து அல்லது வேறு வழிகளில் வெறுமனே வெட்டப்பட்டவை | TS |
| | | | | | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| **32** | **25.16** | | | **பளிங்குரு கருங்கல் (கிரனைற்), வெண்ணிலப் பாறை (போர்பிரி) எரிமலைப் பாறை (பசால்ற்) மணற்கல், பிற சிலை வடிக்கும் கல்லும் அல்லது கட்டிடக் கல்லும், மேலோட்டமாகச் சீவப்பட்டவை, அல்லது வெறுனே வெட்டப்பட்டவை, நீள் சதுரங்களாக (சதுரங்கள் உட்பட) தட்டுகளாக அல்லது குற்றிகளாக அரிந்து அல்லது வேறு வழிகளில்.** | |
| | | | - | பளிங்குரு கருங்கல் (கிரனைற்ட்) | |
| | | 2516.11.00 | -- | செம்மையில்லாத அல்லது மேலோட்டமாகச் சீவப்பட்டவை | TS |
| | | 2516.12.00 | -- | நீள் சதுரங்களாக (சதுரங்கள் உட்பட) குற்றிகளாக அல்லது தட்டுகளாக அரிந்து அல்லது வேறு வழிகளில் வெறுமனே வெட்டப்பட்டவை அல்லது மேலோட்டமாகச் சீவப்பட்டவை | TS |
| | | 2516.20.00 | - | மணற்கல் | TS |
| | | 2516.90.00 | - | பிற சிலை வடிக்கும் கற்கள் அல்லது கட்டடக் கற்கள் | TS |
| | | | | | |
| **33** | **34.01** | | | **சவர்க்காரம்; சவர்க்காரம் கொண்டுள்ள அல்லது கொண்டிராத சட்டங்கள், 'கேக்'குகள், வார்க்கப்பட்ட துண்டுகள் அல்லது உருவங்கள் எனும் நிலைகளில், சவர்க்காரமாக பாவிக்கப்படும் சேதன, மேற்பரப்புத் தாக்கமுள்ள உற்பத்திகளும் தயாரிப்புகளும்; சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கியால் மூடப்பட்ட அல்லது போர்க்கப்பட்ட, பதிக்கப்பட்ட கடதாசி, பின்னல் துணி (வாடிங்) கம்பளமும் (வெல்ட்) நெய்யாத துணிகளும்.** | |
| | | | - | சவர்க்காரமும் சேதன, மேற்பரப்புத் தாக்கமுள்ள உற்பத்திகளும் தயாரிப்புகளும் , சட்டங்கள் 'கேக்'குகள், வார்க்கப்பட்ட துண்டுகள் அல்லது உருவங்கள் எனும் நிலைகளில் கடதாசி, பின்னற்துணி, கம்பளமும் (வெல்ட்) மற்றும் நெய்யாத துணிகளிலான தயாரிப்புகள், சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கியால் மூடப்பட்டவை அல்லது போர்க்கப்பட்டவை, பதிக்கப்பட்டவை : | |
| | | 3401.11.00 | -- | குளியலறைப் பாவணைக்கான (மருந்தேற்றப்பட்ட பொருட்கள் உட்பட) | |
| | | 3401.11.30 | --- | 500g அல்லது குறைவான சில்லறை பொதிகளானவை | TS |
| | | 3401.11.90 | --- | பிற | TS |
| | | 3401.19.00 | -- | பிற : | |
| | | 3401.19.30 | --- | 500g அல்லது குறைவான சில்லறை பொதிகளானவை | TS |
| | | 3401.19.90 | --- | பிற | TS |
| | | 3401.20.00 | - | வேறு வடிவங்களிலான சவர்க்காரங்கள்: | |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 3401.20.90 | --- | பிற | TS |
| | | 3401.30.00 | - | தோலைச் சுத்தமாக்குவதற்கான சேதன மேற்பரப்புத் தாக்கமுள்ள உற்பத்திகளும் தயாரிப்புகளும், திரவம் அல்லது கிறீம் வடிவங்களில் மற்றும் சவர்க்காரம் உள்ளடக்கப்பட்டதும் அல்லது உள்ளடக்கப்படாததும், சில்லறை விற்பனைக்கு விடப்பட்டதுமானவை | |
| | | 3401.30.90 | --- | பிற(பால் குளிப்பு தவிர்ந்தவை) | TS |
| | | | | | |
| 34 | 38.24 | | | **வார்ப்பு ஆலை அச்சுகள் பத்திரங்கள் (மோல்ட்கள்) மற்றும் அச்சுகள் (கோர்கள்) என்பவற்றிற்கு தயாரிக் கப்பட்ட இணைப்பான்கள்; இரசாயன உற்பத்திகளும் இரசாயன அல்லது அது சார்ந்த கைத்தொழில் தயாரிப்புகள் (இயற்கைத் தயாரிப்புகளின் கலவை களைக் கொண்டவை உட்பட), வேறெங்கும் குறிப் பிடாத அல்லது உள்ளடக்கப்படாதவை** | |
| | | 3824.99.00 | -- | பிற : | |
| | | 3824.99.20 | --- | சாலை குறிக்கும் வண்ணப் பூச்சிகள் | TS |
| | | | | | |
| 35 | 39.22 | | | **பிளாத்திக்கிலான குளியல் தொட்டி, தாரைக்குளியல் சாக்கடைத் தொட்டிகள், கழுவுத்தொட்டி, பதிலான கழுவுத்தொட்டி, மலசலகூட பாத்திரங்கள், இருக்கைகள் மற்றும் மூடிகள், கழுவு தொட்டிகளும் அதுபோன்ற சுகாதாரப் பொருட்களும்.** | |
| | | 3922.10.00 | - | குளியல் தொட்டிகள், தாரைக்குளியல்கள், சாக்கடைத் தொட்டில் மற்றும் கழுவுத்தொட்டிகள் | TS |
| | | 3922.90.00 | - | பிற: | |
| | | 3922.90.10 | --- | ‘வால்வு கருவி’ இனை உபயோகித்து பாவிக்கப்படும் நீர்பாவனையற்ற சிறுநீர்கழிப்பான்கள் | TS |
| | | 3922.90.90 | --- | பிற | TS |
| | | | | | |
| 36 | 39.23 | | | **பிளாஸ்த்திக்காலான பொருட்களைக் கொண்டு செல்வதற்கான பொருட்கள்; நிறுத்திகள், மூடிகள், திருகுமூடிகளும் பிற அடைப்பான்களும் பிளாஸ்டிக் காலானவை.** | |
| | | 3923.10.00 | - | பெட்டிகள், உறைப்பெட்டிகள், திறந்த வரிச்சட்டப் பெட்டிகளும் அதுபோன்ற பொருட்களும் | |
| | | 3923.10.90 | --- | பிற (பிளாஸ்டிக் உற்பத்திகள் தவிர்ந்த) | TS |
| | | | - | சாக்குகளும் பைகளும் (கூம்புகள் உட்பட) : | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I இ.மு தலைப்பு | நிரல் II இ.மு குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV தற்காலிக இடைநிறுத்தம் (TS) |
|---|---|---|---|---|---|
| | | 3923.29.00 | -- | பிற பிளாங்திக்குகளின் : | |
| | | 3923.29.10 | --- | 40 மைக்றோன் அல்லது அதிலும் குறைவான தடிப்புடைய அட்டை | TS |
| | | 3923.29.20 | --- | பிற, வெப்பமான சுருங்கு பைகள், பறவை உற்பத்திகளைப் பொதியிடுவதற்கு அச்சிடப்பட்டவை | TS |
| | | 3923.30.00 | - | கண்ணாடிப் பெட்டிகள், வெப்ப காப்பு, போத்தல்கள், குமிழ் போத்தல்களும் அது போன்ற பொருட்களும்: | |
| | | 3923.30.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **37** | **39.24** | | | **மேசை உபகரணங்கள், சமயலறைப்பொருட்கள், ஏனைய வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் ஹைஜினிக் அல்லது கழிவறைப் பொருட்கள், பிளாத்திக்களிலானவை.** | |
| | | 3924.10.00 | - | மேசைப்பொருட்களும் சமயலறைப்பொருட்களும்: | |
| | | 3924.10.10 | --- | மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் எஸ்எல்எஸ்ஐ என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் வகைபிரிக்கக்கூடிய மற்றும் சேதனப் பசளைக்குட்பட்டவை | TS |
| | | 3924.10.90 | --- | பிற பிளாஸ்றிக்குகள்**(முகாம் உபகரணங்கள் தவிர)** | TS |
| | | 3924.90.00 | - | பிற: | |
| | | 3924.90.20 | --- | 1 லீற்றருக்கு மேற்படாத தண்ணீர் குவளைகள், பாரமான உலோகங்கள், நுண்ணங்கிகள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவற்றினை உறிஞ்சிக்கொள்ளும் வகையில் நுன்னிய வடிகட்டிகளுடனானவை | TS |
| | | 3924.90.90 | --- | பிற:**(தொங்கிகள், பால் போத்தல்கள், போத்தல் சூப்பி, முலைக்காம்பு கவசம் மற்றும் சூப்பி தவிர)** | TS |
| | | | | | |
| **38** | **39.25** | | | **கட்டுநாரின் பிளாஸ்திக்காலான பொருட்கள், வேறிடத்தில் குறிக்கப்படாதவை அல்லது சேர்க்கப் படாதவை.** | |
| | | 3925.10.00 | - | தேக்கங்கள், தொட்டிகள், கொப்பறைகளும் அதுபோன்ற கொள்கலன்களும், 300 லீற்றர் கொள்ளவிலும் கூடியவை | TS |
| | | 3925.20.00 | - | கதவுகள், சாளரங்களும் அவற்றின் சட்டங்களும் கதவு எல்லைகற்களும் | TS |
| | | 3925.30.00 | - | சாளர சிறுமுடிகள், திரைகள் (வெளிஷியன் பிளைண்ட் உட்பட) அதுபோன்ற பொருட்களும் அவற்றின் பாகங்களும் | TS |
| | | 3925.90.00 | - | பிற | TS |
| | | | | | |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| **39** | **39.26** | | | **பிளாத்திக்காலான பிற பொருட்களும் தலைப்பு 39.01 முதல் 39.14 வரையானவற்றின் பிற பொருட் களின் தயாரிப்புப் பொருட்கள்.** | |
| | | 3926.10.00 | - | அலுவலக அல்லது பாடசாலை விநியோகப் பொருட்கள்: | |
| | | 3926.10.90 | -- | பிற (பெறுமதி கூட்டப்பட்ட விவசாய பயிர் உற்பத்திக்குப் பயன்படும் பசுமை இல்லங்கள் தயாரிப்பதற்காக தேவைப்படும் புற ஊதா கதிர்களால் தாக்கமுறும் பொலித்தீன் தவிர) | TS |
| | | 3926.30.00 | - | தளபாடம், வண்டிப்பெட்டி போன்றவற்றிற்கான பொருத்துகள் அல்லது அது போன்றவை | TS |
| | | 3926.40.00 | - | சிலைகளும் பிற அலங்காரப் பொருட்களும் | TS |
| | | 3926.90.00 | - | பிற: | |
| | | 3926.90.60 | --- | பற்தூரிகைகளுக்கான கைப்பிடிகள் | TS |
| | | | | | |
| **40** | **46.01** | | | **கீற்றுகளாக பொறுத்தப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும் பிளேட்டிங் பொருட்களின் பிளேட்டுகள் மற்றும் ஒத்த தயாரிப்புகள் பிளேட்டிங் பொருட்கள், பிளேட்டுகள் மற்றும் பிளேட்டிங் பொருட்களின் ஒத்த தயாரிப்புகள், இணையான இழைகளாக அல்லது நெய்யப்பட்டவை, தாள் வடிவத்தில், முடிக்கப்பட்ட பொருட்கள் (உதாரணம் மேட்ஸ், மேட்டிங், ஸ்கிரீன்ஸ்).** | |
| | | | - | தாவரப் பொருட்களின் மேட்ஸ், மேட்டிங் மற்றும் ஸ்கிரீனிங்ஸ் : | |
| | | 4601.21.00 | -- | அவற்றுள் மூங்கில் | TS |
| | | 4601.29.00 | -- | பிற | TS |
| | | | - | பிற: | |
| | | 4601.92.00 | -- | அவற்றுள் மூங்கில் | TS |
| | | 4601.99.00 | -- | பிற | TS |
| | | | | | |
| **41** | **46.02** | | | **தலைப்பிலக்கம் 46:01 இன் பொருட்களிலிருந்து செய்யப்பட்ட அல்லது பின்னலுக்கான பொருட்களி லிருந்து நேரடியாக உருவாக்கப்பட்ட கூடை வேலை பின்னல் வேலைப் பொருட்களும் பிற பொருட்களும்; லூபா இன் பொருட்கள்.** | |
| | | | - | மரக்கறிப் பொருட்கள் உடைய : | |
| | | 4602.11.00 | -- | அவற்றுள் மூங்கில் | TS |
| | | 4602.12.00 | -- | அவற்றுள் ரட்டான் | TS |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 4602.19.00 | -- | பிற | TS |
| | | 4602.90.00 | - | பிற | TS |
| | | | | | |
| **42** | **67.01** | **6701.00.00** | | **பறவைகளின் தோல்களும் இறகுகளுடன் கூடிய வேறு பாகங்களும் அல்லது மெல்லிய இறகுகளினாலானவை, இறகுகள், இறகுப்பாகங்களினால் ஆனவை அல்லது மென்னிறகுகளாலானவையும் அவை போன்ற பிறவும் (தலைப்பு 05.05 இன் கீழ் வருவனவும் இறகுகளும் இறகு முனைகளாலும் ஆனவை நீங்கலாக).** | TS |
| | | | | | |
| **43** | **67.02** | | | **செயற்கைப் பூக்கள், இலைகள் அல்லது பழங்கள் அவை போன்ற உறுப்புகள் செயற்கைப் பூக்களிலான பொருட்கள் மற்றும் இலைகள், பழங்கள் முதலியன.** | |
| | | 6702.10.00 | - | பிளாஸ்ரிக்குகளின் | TS |
| | | 6702.90.00 | - | வேறு பொருட்களின் | TS |
| | | | | | |
| **44** | **68.02** | | | **தொழிற்பட்ட மொனுமென்டல் அல்லது கட்டிடக் கல் (ஸ்லேட் தவிர) அது தொடர்பான பொருட்கள் மற்றும் 68.01 தலைப்பின் கீழ் ஏனைய பொருட்கள் மொஸாய்க் கியுப்ஸ் இயற்கை கல் (ஸ்லேட் உள்ளடங்க லாக) பின்னால் இருப்பினும் இல்லாவிட்டாலும் இயற்கையாக நிறம் தீட்டப்பட்ட கிரனூல்ஸ், இயற்கை கல் துகள்கள் மற்றும் மா (ஸ்லேட் உள்ளடங்களாக).** | |
| | | 6802.10.00 | - | பாரிய மேற்பரப்பானது ஒரு சதுர வடிவத்திற்குள் அமைக்கக்கூடியதாகவும் அவற்றின் பாகங்கள் 7 சென்றி மீற்றர் அளவுக்கு குறைந்ததாகவும் உடைய ஓடுகள், திண்மங்களும் அவை போன்ற பொருட்களும் நீள் சதுர வடிவங்களாக அல்லது நீள் சதுர வடிவமல்லாதவைகளாக (சதுர வடிவங்கள் உட்பட) செயற்கை வர்ணம் ஊட்டப்பட்ட சிறு உருண்டைகள், துணுக்குகள் (சீவல்) அல்லது துகள்கள் வேறு படிவைக் கற்கள் | TS |
| | | | - | வேறு நினைவுச்சின்ன அல்லது கட்டடக் கற்களும் மற்றும் இவை போன்ற வேறு பொருட்கள் சாதாரணமாக வெட்டி அல்லது அரிந்தவை தட்டையான அல்லது சமமான மேற்பரப்புடையன: | |
| | | 6802.21.00 | -- | பளிங்குக் கற்கள், பொற்படிக்கல், வெண்சலவைக்கல் | TS |
| | | 6802.23.00 | -- | கருங்கல் | TS |
| | | 6802.29.00 | -- | பிற கற்கள் | TS |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I இ.மு தலைப்பு | நிரல் II இ.மு குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV தற்காலிக இடைநிறுத்தம் (TS) |
|---|---|---|---|---|---|
| | | | - | பிற : | |
| | | 6802.91.00 | -- | மார்ப்ல், ட்ராவெர்டைன் மற்றும் அலபாஸ்டர்: | |
| | | 6802.91.10 | --- | தீட்டப்படாத மார்ப்ல் ஸ்லப்ஸ், மியர்லி கட், ஒரு பக்கம் பிரயோகம் மற்றும் மறுபக்கத்தில் கிளாஸ் பைபர் வலையமைப்பு | TS |
| | | 6802.91.90 | --- | பிற | TS |
| | | 6802.92.00 | -- | சுண்ண நீற்றுச் சார்புள்ள பிற கற்கள் | TS |
| | | 6802.93.00 | -- | கருங்கல் | TS |
| | | 6802.99.00 | -- | பிற கற்கள் : | |
| | | 6802.99.10 | --- | அரைக்கும் ஆலைகளுக்கான உருளைக் கற்கள் | TS |
| | | 6802.99.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **45** | **68.10** | | | **சீமெந்தினாலான, கொங்கிறீட் அல்லது செயற்கைக் கல்லால் ஆன பொருட்கள் வலுவூட்டப்பட்டன அல்லது வலுவூட்டப்படாதன.** | |
| | | | - | ஓடுகள், பாவுகற்கள், குற்றிகள் ஒத்த பொருட்கள் : | |
| | | 6810.11.00 | -- | கட்டிடக் குற்றிகளும் கட்டிகளும் : | |
| | | 6810.11.90 | --- | பிற | TS |
| | | 6810.19.00 | -- | பிற | TS |
| | | | - | பிற பொருட்கள் : | |
| | | 6810.91.00 | -- | வார்ப்படம் செய்யப்பட்ட கட்டிட அல்லது பொது வேலைப் பொறியியல் (பொருத்திகள்) ஆக்கக் கூறுகள் | TS |
| | | 6810.99.00 | -- | பிற: | |
| | | 6810.99.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **46** | **68.11** | | | **கல் நார் சீமேந்தினாலான செலுலோஸ் நாரினாலான அல்லது அதையொத்த வேறு பொருட்களிலான செலுலோஸ் நாரினாலான அல்லது அதையொத்த வேறு பொருட்களினாலான பொருட்கள்.** | |
| | | 6811.40.00 | - | கல் நார்களைக் கொண்டுள்ளவை : | |
| | | 6811.40.10 | --- | மேடுபள்ளங்களைக் கொண்ட தாள்கள் | TS |
| | | 6811.40.20 | --- | பிற தகடுகள், சட்டங்கள் ஓடுகளும் அதையொத்த பொருட்களும் | TS |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 6811.40.30 | --- | குழாய்கள், வைப்புகளும் குழாய் அல்லது வைப்பு இணைப்புகளும் | TS |
| | | 6811.40.40 | --- | சிப்பத்தகட்டு பூண்களும் இணைப்புகளும் | TS |
| | | 6811.40.90 | --- | பிற | TS |
| | | | - | அஸ்பெஸ்டஸ் உள்ளடங்கியதல்லாத : | |
| | | 6811.81.00 | -- | மேடு பள்ளங்களைக் கொண்ட தகடுகள் | TS |
| | | | | | |
| **47** | **69.05** | | | **கூரை ஓடுகள், புகைபோக்கிகள், புகை போக்கி நிரைகள், கூரை உச்ச கலை வேலைப்பாடுகள், சிற்ப வேலைக்கான அலங்கரிப்புப் பொருட்களும் வேறு மண்ணாலான கட்டடப் பொருட்களும்.** | |
| | | 6905.10.00 | - | கூரை ஓடுகள் | TS |
| | | 6905.90.00 | - | பிற | TS |
| | | | | | |
| **48** | **69.07** | | | **வெண்களி மண்ணிலான கொடிகள் மற்றும் தளவரிசைக்கற்கள், அடுப்பங்கரை மற்றும் சுவர் ஓடுகள்; வெண்களிமண்ணிலான சதுர பளபளப்புக் கல் மற்றும் அது போன்றவைகளும், அடிமீட்டில் இடப்பட்ட அல்லது இடப்படாதவை; முடிவாக்கம் செய்யப்பட்ட மட்பாண்டங்கள்.** | |
| | | | - | கொடிகள் மற்றும் தளவரிசைக்கற்கள், அடுப்பங்கரை மற்றும் சுவர் ஓடுகள், உபதலைப்பு 6907.30 மற்றும் 6907.40 தவிர்ந்தவை : | |
| | | 6907.21.00 | -- | குணகம் 0.5% விகிதத்திற்கு மேற்படாத நிறையளவினால் நீர் உறிஞ்சுபவைகளது : | |
| | | 6907.21.10 | --- | சுவர் ஓடுகள் | TS |
| | | 6907.21.90 | --- | பிற | TS |
| | | 6907.22.00 | -- | குணகம் 0.5% விகிதத்திற்கு மேற்பட்ட ஆனால் 10% விகிதத்திற்கு மேற்படாத நிறையளவினால் நீர் உறிஞ்சுபவைகளது : | |
| | | 6907.22.10 | --- | சுவர் ஓடுகள் | TS |
| | | 6907.22.90 | --- | பிற | TS |
| | | 6907.23.00 | -- | குணகம் 10% விகிதத்திற்கு மேற்பட்ட நிறையளவினால் நீர் உறிஞ்சுபவைகளது : | |
| | | 6907.23.10 | --- | சுவர் ஓடுகள் | TS |

அட்டவணை I *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 6907.23.90 | --- | பிற | TS |
| | | 6907.30.00 | - | சதுர பளபளப்புக் கல் மற்றும் அது போன்றவைகளும், உபதலைப்பு 6907.40 இல் உள்ளவை தவிர்ந்தவை | TS |
| | | 6907.40.00 | - | முடிவாக்கம் செய்யப்பட்ட மட்பாண்டங்கள் | TS |
| | | | | | |
| **49** | **69.14** | | | **வேறு மண்ணாலான பொருட்கள்.** | |
| | | 6914.90.00 | - | பிற : | |
| | | 6914.90.10 | --- | அலங்காரப் பொருட்கள் | TS |
| | | 6914.90.90 | --- | பிற | TS |
| | | | | | |
| **50** | **87.02** | | | **ஓட்டுபவர் அடங்கலாக, பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள்** | |
| | | 8702.10.00 | - | பொறிமுறை அழுத்த உள்ளக எரிநிலை ஆடுதண்டு இயந்திரத்தினை மாத்திரம் கொண்ட (டீசல் அல்லது பகுதியளவில்-டீசல்): | |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக, 13 நபர்களுக்குக் குறைவான வர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.10.12 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.19 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 13 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 25 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், 5 வருடங்களுக்கு மேற்படாதவை : | |
| | | 8702.10.32 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.39 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், பத்து வருடங் களுக்கு மேற்படாதவை: | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 8702.10.53 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.55 | ---- | பிற, 5 வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.59 | ---- | பிற | TS |
| | | | --- | பிற, பத்து வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.10.73 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.75 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.10.79 | ---- | பிற | TS |
| | | | --- | பிற, பத்து வருடங்களுக்கு மேற்பட்டவை: | |
| | | 8702.20.00 | - | பொறிமுறை அமுக்க உள்ளக எரிநிலை ஆடுதண்டு இயந்திரம் (டீசல் அல்லது பகுதியளவில்-டீசல்) மற்றும் உந்து விசைக்கான மோட்டார்களாக மின்சார மோட்டார் ஆகிய இரண்டினையும் கொண்டவை: | |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக, 13 நபர்களுக்குக் குறைவான வர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.20.11 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.20.19 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், 10 வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.20.31 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.20.39 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், பத்து வருடங்களுக்கு மேற்படாதவை : | |
| | | 8702.20.51 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.20.53 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I இ.மு தலைப்பு | நிரல் II இ.மு குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV தற்காலிக இடைநிறுத்தம் (TS) |
|---|---|---|---|---|---|
| | | 8702.20.59 | ---- | பிற | TS |
| | | 8702.20.71 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டவை | TS |
| | | 8702.20.73 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.20.79 | ---- | பிற | |
| | | | --- | பிற, பத்து வருடங்களுக்கு மேற்பட்டவை: | TS |
| | | 8702.30.00 | ---- | பொறிமுறை அழுத்த உள்ளக எரிநிலை ஆடுதண்டு இயந்திரம் (டீசல் அல்லது பகுதியளவில் டீசல்) மற்றும் உந்து விசைக்கான மோட்டார்களாக மின்சார மோட்டார் ஆகிய இரண்டினையும் கொண்டவை: | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக, 13 நபர்களுக்குக் குறைவான வர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை: | TS |
| | | 8702.30.11 | --- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.39 | ---- | பிற | |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், 5 வருடங்களுக்கு மேற்படாதவை : | |
| | | 8702.30.51 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.31 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.39 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், 10 வருடங்களுக்கு மேற்படாதவை | |
| | | 8702.30.51 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.53 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.59 | ---- | பிற | TS |
| | | | --- | பிற, பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>(TS) |
|---|---|---|---|---|---|
| | | 8702.30.71 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.73 | ---- | பிற, ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.30.79 | ---- | பிற | TS |
| | | | --- | பிற, பத்து வருடங்களுக்கு மேற்பட்டவை: | |
| | | 8702.40.00 | - | உந்துவிசைக்கான மின்சார மோட்டருடன் மாத்திரம் கொண்டவை: | |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக, 13 நபர்களுக்குக் குறைவான வர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், மூன்றரை வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.40.11 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.40.19 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 13 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 25 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை: | |
| | | 8702.40.31 | ---- | தலைப்பு 87.03 இன் கீழான மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை | TS |
| | | 8702.40.39 | ---- | பிற | TS |
| | | | --- | ஓட்டுபவர் அடங்கலாக 25 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் (வயது வந்தவர்கள்) ஆனால் 35 நபர்களுக்குக் குறைவானவர்கள் (வயது வந்தவர்கள்) பிரயாணம் செய்வதற்கான மோட்டார் வாகனங்கள், 10 வருடங்களுக்கு மேற்படாதவை: : | |
